




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






Vol: 03 | Issue: 257 | 4 Pages | 25.07.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 03 | இதழ்: 257 | 4 பக்கங்கள் | 25.07.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**

**விளக்கம்:**
**மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகத்தில்வானோர்க்காகநடக்கும் திருவிழாவும் நடைபெறாது; நாள் வழிபாடும் நடைபெறாது.**

## அமெரிக்கா ராணுவ பட்ஜெட்டுக்கு ஒப்புதல் எத்தனை லட்சம் கோடி தெரியுமா?




வாஷிங்டன், ஜூலை 25

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே 4 மாதங்களுக்கும் மேலாக சண்டை நடைபெற்று வருகிறது. இந்த சண்டையால் அமெரிக்காவுக்கு சராசரியாக ஒருநாளைக்கு சுமார் 8 ஆயிரம் கோடிகளும் இதுவரை ரூ.3 லட்சம் கோடிக்கும்மேல்செலவுஏற்பட்டுள்ளதாககூறப்படுகிறது.அதுமட்டுமின்றி அமெரிக்காவின் அதிநவீன ஏவுகணை மற்றும் ஆயுத இருப்பு கணிசமாக குறைந்துள்ளது.

இந்நிலையில், ராணுவத்தை பலப்படுத்த. 111 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கும் மசோதாவுக்கு, அமெரிக்கா கீழ்சபையான பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்துள்ளது. மசோதாவில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளுக்குஇடையேராணுவஒருங்கிணைப்பைவலுப்படுத்துவதற்கான முக்கிய திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், அமெரிக்கப் படை வீரர்களுக்கு 5 முதல் 7 சதவிதம் வரை ஊதிய உயர்வு வழங்க முன்மொழியப் பட்டுள்ளது.இஸ்ரேலின் 'அயர்ன் டோம்'ஏவுகணைத் தடுப்பு அமைப்பை போன்று. 'கோல்டன் டோம் என்ற புதிய ஏவுகணைத் தடுப்பு அமைப்பை அதிபர் உருவாக்க டொனால்டு டிரம்ப்திட்டமிட்டுள்ளார். இதற்கு இந்த மசோதா வழிவகை செய்கிறது.

## செங்கடலில் சவுதி அரேபியா கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்



ஈரானுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு அந்த நாடு மீது தாக்குதல் நடத்தி வரும் அமெரிக்கா, ஈரானின் மின் உற்பத்தி தளங்கள் மற்றும் பாலங்கள் போன்ற உள்கட்டமைப்புகளை நாசப்படுத்தி வருகிறது.இதற்கு கடும் பதிலடி கொடுத்து வரும் ஈரானும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறி வைத்து சேதப்படுத்தி வருகிறது. இரு தரப்புக்கும் இடையே நடந்து வரும் இந்த தாக்குதல்கள் 12வது நாளாக நேற்று முன்தினமும் நீடித்தது.கச்சா எண்ணெய் விலை உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளால்உலகம்முழுவதும்அவதிக்குள்ளாக்கிவரும்இந்தமோதலில் நேற்று புதிய திருப்பம் ஏற்பட்டது.

அதாவது ஈரானுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் கப்பல்களை தாக்கி புதிய பரபரப்பை பற்ற வைத்தனர். செங்கடலில் கப்பல் போக்குவரத்துக்கு அவ்வப்போது இடையூறு ஏற்படுத்தி வரும் அவர்கள் மீண்டும் இந்த தாக்குதல்களை தொடங்கி உள்ளனர்.அதன்படி செங்கடலில் சென்று கொண்டிருந்த என்சிலியா, லய்லா ஆகிய 2 எண்ணெய்கப்பல்களைஇந்தகிளர்ச்சியாளர்கள் தாக்கினர். சவுதி அரேபியாவுக்கு சொந்தமான இந்த கப்பல்கள் தீப்பிடித்து எரிந்தன. எனினும் இதில் உயிர்ச்சேதம் குறித்து தகவல் இல்லை.ஈரானுக்கு எதிராக போர் தொடங்கியது முதல் இதுவரை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எந்ததாக்குதல்களையும்நடத்தாதநிலையில்,தற்போதுசவுதிஅரேபியாவின் கப்பல்களை தாக்கியிருப்பதன் மூலம் வளைகுடா போரில் புதிய திருப்பம் ஏற்பட்டுஉள்ளது.இதற்கிடயே,ஈரான்மற்றும்ஹவுதிகிளர்ச்சியாளர்களுக்கு எதிராக "மிகப்பெரிய பதிலடி" கொடுக்கப்படும் என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார். செங்கடலில் எண்ணெய் கப்பல் குறிவைக்கப்பட்டதால், சர்வதேச கடல் போக்குவரத்து மேலும் பாதிக்கப்படலாம் என்ற கவலை முதலீட்டாளர்களிடையே உருவாகியுள்ளது. குறிப்பாக, மற்றொரு முக்கிய கடல் வழித்தடமும் முடங்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக உலகளாவிய கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது.சர்வதேச சந்தையில் பிரென்ட் கச்சா எண்ணெய் விலை 6 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்து, ஒரு பீப்பாய் 100 அமெரிக்க டாலரை கடந்தது. கடந்த மே மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக பிரென்ட் கச்சா எண்ணெய் விலை 100 டாலர் என்ற அளவை மீண்டும் எட்டியுள்ளது. மத்திய கிழக்கில் பதற்றம் மேலும் தீவிரமடைந்து வருவதால், உலகளாவிய எரிசக்தி சந்தை மற்றும் கடல் வர்த்தகத்தில் இதன் தாக்கம் அதிகரிக்கும் என்ற அச்சம் நிலவி வருகிறது

## மேற்கு கரையில் துப்பாக்கி சூடு: 5 பேர் உயிரிழப்பு



ஜெருசலேம், ஜூலை 25

காசாவில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனகிளர்ச்சிப்படையான ஹமாஸ்இடையில்நடைபெற்று வந்த போரானது கடந்த 2025 அக்டோபர்10ந்தேதிமுடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இருதரப்பும் போர்நிறுத்த ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்டதன் மூலம் இந்த முடிவுஎட்டப்பட்டதாகக்கூறப்பட்டது.ஆனால்,போர்நிறுத்தஒப்பந்தத்தை மீறி காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது

இந்த நிலையில், காசாவின் மேற்கு கரையில் உள்ள நப்லஸ் பகுதி அருகே நடந்த துப்பாக்கி சூடு தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 4 பேர் மற்றும் இஸ்ரேலை சேர்ந்த ஒருவர் என மொத்தம் 5 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 4 பாலஸ்தீனியர்களுக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும், அவர்களில் 3 கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் பாலஸ்தீனிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. அதே சமயம், காயமடைந்த 2 இஸ்ரேலியர்கள் மேற்கு கரையில் உருந்து விமானம் மூலம் மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்ததுப்பாக்கிசூடுதாக்குதலுக்கானகாரணம்குறித்து உடனடிதகவல்கள் வெளியாகவில்லை. இஸ்ரேல் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இந்தப் பகுதியில் சமீப காலமாக வன்முறை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேகதாது அணை விவகாரம்: 3ம் தேதி கர்நாடகா செல்கிறார் முதல்அமைச்சர்

சென்னை, ஜூலை 25

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடகம் எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழ்நாடு அரசு எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த விவகாரத்தில் இரு மாநிலங்களுக்கும் இடையே மோதல்போக்கு நிலவி வருகிறது. கர்நாடகத்தில் தென் மேற்கு பருவமழை சரியாக பெய்ய வில்லை. இதனால் கே.ஆர்.எஸ். அணை உள்ளிட்ட காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள அணைகள் நிரம்ப வில்லை. குடிநீர் தேவைக்கு மட்டுமே நீரை பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. அணைகளுக்கு நீர்வரத்து இல்லாததால், காவிரியில் தமிழகத்துக்கு தேவையானநீரைதிறந்துவிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்திலும், 'பாசனத்திற்காக தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது' என கர்நாடக அரசு தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில், கர்நா டகா தமிழகம் இடையில் உள்ள நீண்ட கால பிரச்சினையான காவிரி நதி நீர் பங்கீடு பற்றியும்; மேகதாதுவில் அணை கட்டுவது பற்றியும் விவாதிக்க கர்நாடக அரசின் நீர்ப்பாசன துறை அதிகாரிகள், தமிழக அரசின் நீர் வளத்துறை அதிகாரிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதில், 'நதிநீர் பங்கீடு, மேகதாது அணை பற்றி பெங்களூரில் வருகிற 3ம் தேதி, கர்நாடக தமிழக முதல் மந்திரிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தலாம்' என, அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளதாகவும் இதற்கு தமிழக அரசிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை என்றும் கூறப்பட்டது. இந்த நிலையில், மேகதாதுஅணைவிவகராம்தொடர்பாக முதல்அமைச்சர் விஜய் வருகிற 3ம் தேதி கர்நாடகம் செல்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேளாண்துறை



அமைச்சர் வினோத் கூறுகையில், "கர்நாடகாவில் 3 ம் தேதி நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் முதல் அமைச்சர் விஜய் பங்கேற்கிறார். கூட்டத்தில் தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை காவிரியில் திறக்க வலியுறுத்தப்படும் மேகதாது அணையை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம், அது நமது உரிமை.

மழை பெய்யவில்லை. அதனால், காவிரியில் தண்ணீர் திறக்கவில்லை என்று கர்நாடகா தரப்பில் சொல்கிறார்கள்; இருந்தாலும், நமது உரிமைக்காக முதல்அமைச்சர் விஜய் காவிரி தண்ணீரை கேட்டு பெறுவார் என்று கூறினார்.

## கந்தர்வகோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் உலக சதுரங்க தினம் கொண்டாடப்பட்டது



கந்தர்வகோட்டை ஜ்லை 23

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் உலக சதுரங்க தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ் செல்வி தலைமை வகித்தார். உலக சதுரங்க தினம் குறித்து கந்தர்வகோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒன்றிய தலைவரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும் பொழுது உலக செஸ் தினம் என்பது அனைத்துலக சதுரங்க நாள் ஆண்டுதோறும் ஜூலை 20 அன்று கொண்டாடப்படுகிறது. இத்தினம் சர்வதேச செஸ் கூட்டமைப்பு நிறுவப்பட்டதை நினைவு கூருகிறது, சதுரங்க விளையாட்டின் மூளைத்திறனை மேம்படுத்துகிறது. உலக சதுரங்க தினம் ஐக்கிய நாடுகள் சபையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1924 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் நாள் பாரிஸ் நகரில் சர்வதேச செஸ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இத்தினத்திற்கு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் அளித்தது.

சதுரங்க ஆடுவதால் நினைவாற்றல், கவனம், திட்டமிடல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை மேம்படுத்துகிறது. இளம் இந்திய கிராண்ட்மாஸ்டர்கள் உலகின் மிக வலிமையான வீரர்களுக்குத் தொடர்ந்து சவால் விடுத்து வெற்றி பெற்றுவருகின்றனர். இந்தியாவில் டி. குகேஷ், ஆர். பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி, நிஹால் சரின் மற்றும் அரவிந்த் சிதம்பரம் போன்ற இளைஞர்கள் உலகளாவிய போட்டியாளர்களாக உருவெடுத்துள்ளனர். அனைத்து மாணவர்களும் ஆர்வமுடன் சதுரங்க ஆட்டம் ஆட வேண்டும் தொடர்ந்து பயிற்சி எடுக்க வேண்டும் என்று பேசினார்.




திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி வட்டாட்சியர் அலுவலகம் சார்பில் இன்று மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல் கட்டம் வீடு வீடாக சென்று கணக்கெடுக்கும் பணி மற்றும் விழிப்புணர்வு பேரணியை சேரன்மகாதேவி சப் கலெக்டர் திரு அயூஸ் குப்தா ஐஏஎஸ் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் சேரை வட்டாட்சியர் சுப்பிரமணியன், சேரை காவல் உதவி ஆய்வாளர் அன்ன ஜோதி, வருவாய் ஆய்வாளர், கிராம அலுவலர்கள், மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர் நெய்னா முகமது பள்ளி மேலாண்மை குழு தலைவி ஷைலா மற்றும் சேரை அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

## மாநில கல்வியியல் ஆராய்ச்சி நிறுவன விரிவுரையாளர்களுக்கு பதவி உயர்வு: ஆணைகளை அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார்



சென்னை, ஜூலை 25

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் முதுநிலை விரிவுரையாளர்களாக பணிபுரிந்து வந்த 7 பேர் இணை இயக்குநர் மற்றும் முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இதே போல், விரிவுரையாளர்களாக பணிபுரிந்து வந்த 12 பேர் முதுநிலை விரிவுரையாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பதவி உயர்வு ஆணைகளை பள்ளி கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார்.

இந்த நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்திர மோகன், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் ந.லதா மற்றும் இணை இயக்குநர் எம். ராமகிருஷ்ணன்ஆகியோர்கலந்துகொண்டனர்.

## தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ரூ.100 கோடி மோசடி செய்த வழக்கு: மேலும் இருவர் கைது



சென்னை, ஜூலை 26

'பி.டி.அரசகுமார் மற்றும் அவருடன் சேர்ந்த சிலர் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம்' என்ற பெயரில் பதிவு செய்யப்படாத சங்கத்தை நடத்தி வந்துள்ளனர். இவர்கள் தனியார் பள்ளிகளில் நிரந்தர அங்கீகாரம், பள்ளித் தர உயர்வு, டிடிசிபி மற்றும் சிஎம்டிஏ ஒப்புதல், ஆர்டிஇ உள்ளிட்ட அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி, பள்ளி நிர்வாகிகளிடம் சுமார் ரூ.100 கோடி வசூலித்து மோசடி செய்ததாக கூறி தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலர் டி.சி. இளங்கோவன் புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்பட்ட திமுக பிரமுகரான பி.டி.அரசகுமார் கடந்த ஜூன் 27இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் அவர் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்தது. விசாரணையில், 2024 முதல் பள்ளி நிர்வாகிகளைச் சந்தித்து பணம் வசூலித்தது தெரிய வந்தது. இதையடுத்து, இந்த வழக்கில் தொடர்புடைய 61 வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதுவரை பாதிக்கப்பட்ட 120 பள்ளி நிர்வாகிகள் உள்பட 190 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

தொடர் விசாரணையில், மதுரை, சோலை அழகுபுரத்தைச் சேர்ந்த ஆரோக்கியராஜ்(எ)ராஜா(39),திருச்சிஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த சுரேஷ் (49) ஆகியோர் அரசகுமாருக்கு உடந்தையாக இருந்து, பள்ளி நிர்வாகிகளிடம் பணம் வசூலித்தது தெரிய வந்தது. இருவரையும் போலீஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இந்த மோசடியில் தொடர்புடைய மேலும் சிலரைத் தேடும் பணியில் போலீஸார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நடிப்பில் கடைசி திரைப்படமான ஜனநாயகன் நெல்லையில் மாவட்ட தொண்டர் அணி சார்பாக ரசிகர்கள் அனைவரும் தங்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாககையெழுத்து பலகை வைக்கப்பட்டன இதில் எண்ணற்ற ரசிகர்கள் பொதுமக்கள் தங்களின் விருப்பத்தை உணர்ச்சியை பாசத்தை அன்பை கையெழுத்து வடிவத்தில் வெளிப்படுத்தினர்.

# தமிழ்நாட்டில் ஏஐ பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை அமைச்சர் குமார் தகவல்

சென்னை, ஜூலை 25

சென்னை, மத்திய அரசிடம் மாநில அரசின் தேவைகளையும், எண்ணங்களையும் கூறி செயற்கை நுண்ணறிவை பாதுகாப்பான முறையில் கட்டமைத்து, மேம்படுத்த உள்ளதாகவும், தமிழ்நாட்டில் AI பல்கலைக் கழகம் அமைப்பதற்கான ஆலோசனைநடைபெற்று வருகிறது என செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சர் குமார் தெரிவித்தார்.




சென்னை அண்ணா சாலையில் உள்ள தனியார் விடுதியில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் சார்பாக புத்தாக்கக் கருத்தரங்கம் நடைபெற்றது. செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் குமார், சென்னை ஐஐடி இயக்குனர் காமகோடி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தரவு சேவைகள் துறை செயலாளர் அஜய் மிட்டல் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் குமார், முதல்வர் ஜோசப் விஜய் தமிழ்நாட்டின் GDP ஐ அதிகரித்து கொண்டு வருவதற்காக கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது. எல்லாருடைய தரப்பில் இருந்தும் மிக அற்புதமான வரவேற்பு இருந்தது. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மட்டும் இல்லாமல், அனைவரும் ஒரே நிலையில் இந்த மாநிலத்தை எப்படி உயர்த்த வேண்டும் என்னென்ன முயற்சி எடுக்க வேண்டும், எப்படி செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து இந்த கருத்தரங்கில் பேசப்பட்டது.

இப்போது இருக்கின்ற காலத்தில் இருந்து 10 மடங்கு எப்படி வளர்ச்சியை கொண்டு வரவேண்டும் என்பது குறித்து இந்த வட்டமேசை கருத்தரங்கில் பலரும் கருத்துக்களை கூறினார்கள்.

தற்போதைய காலக்கட்டத்தில் பலரும் தங்களுக்கு தெரிந்த செயற்கை நுண்ணறிவு செயலியை பயன்படுத்துகிறார்கள், அவை பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்பது குறித்தும் இதில் பேசப்பட்டது. அனைத்து துறைகளிலும் AI பரவியுள்ளது. AI மீது அதிகம் கவனம் கொடுத்து, எல்லோருக்குமான பாதுகாப்பான விதமாக AI இருக்க வழி செய்வோம்.

எல்லோரும் ஒன்று கூடினால் எல்லோராலும் இந்த மாநிலத்தை நம்பர் ஒன் மாநிலமாக மாற்ற முடியும்.

இந்தியாவில் AI India mission என்று தான் உள்ளது, இதற்காக தனி அமைச்சகம் இல்லை. மத்திய அரசின் மூலமாக, விதிகளின் படி AI ஐ பலரும் பயன்படுத்த உள்ளோம்.

மத்திய அரசிடம் மாநில அரசின் தேவைகளையும், எண்ணங்களையும் கூறி செயற்கை நுண்ணறிவை பாதுகாப்பான முறையில் கட்டமைத்து, மேம்படுத்த உள்ளோம்.

பொதுவாகவே AI மூலமாக வேலைவாய்ப்புகள் பறிபோக உள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் AI மூலமாக 1.60 மில்லியன் வேலை வாய்ப்புகள், வரும் 2030 வருடத்திற்கு உருவாகும் என ஒரு ஆய்வில் வெளி வந்துள்ளது. அந்த வகையில் AI மூலமாக வேலை வாய்ப்புகள் பறிபோகவில்லை, அதிகரிக்கக் கூடும்.

நம் தமிழ்நாட்டில் 8 மாவட்டங்கள் கல்வியில் சிறந்து விளங்குகிறது. இதில் கிராமப் புற அளவில் அடுத்த 10 வருடங்களுக்கான பயிற்சியை வழங்கி AI மூலமாக கலந்துரையாடல் கல்வியை அறிமுகப் படுத்தி, குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை இரு மடங்காக மேம்படுத்த உள்ளோம்.

மேலும் AI பல்கலைக் கழகம் ஆரம்பிப்பது குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது. அதற்கான ஒத்துழைப்பை ஐஐடி மெட்ராஸ் வழங்கும் என்று அமைச்சர் குமார் தெரிவித்தார்.

சென்னை ஐஐடி இயக்குனர் காமகோடி கூறும் பொழுது, டீப் டெக் தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கு சென்னை ஐஐடி கல்வி சார்ந்த உதவிகளை வழங்கும்.

இதன் கொள்கைகள் அடிப்படையில் பாதுகாப்பாக இயக்குவதற்கு தேவையான உதவிகளையும் தமிழ்நாடு அரசுக்கு வழங்கும் மேலும் செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான பாடத்திட்டங்களை உருவாக்கவும் உறுதுணையாக இருப்போம் என தெரிவித்தார்.

# கோபிசெட்டிபாளையத்தில் ஜனநாயகன் திரைப்படத்தை தியேட்டரில் கட்சியினருடன் பார்த்தார் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் ரசிகர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

கோபி, ஜூலை 25

தமிழக முதலமைச்சர் விஜய் நடிப்பில், பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாகி இன்று உலகம் முழுவதும் வெளியாகியுள்ள ஜனநாயகன் திரைப்படத்தை, தமிழக வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கோபிசெட்டிபாளையத்தில் உள்ள திரையரங்கில் கட்சியினருடன் நேரில் சென்று பார்த்தார். மேலும், தியேட்டருக்கு வந்திருந்த ரசிகர்களுக்கு அவர் இனிப்புகளை வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்



முதலமைச்சர்சி.ஜோசப் விஜய் நடித்த கடைசித் திரைப்படம் என்பதால் ஜனநாயகன் படத்திற்கு அனைத்து வட்டாரத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இத்திரைப்படம் கடந்த சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாகவே திரைக்கு வர வேண்டியதாக இருந்தது. ஆனால், அரசியல் காரணங்கள் மற்றும் தணிக்கைத்துறையின் கடுமையான கட்டுப்பாடுகள், பல்வேறு தடைகள் காரணமாக இதன் ரிலீஸ் தள்ளிப்போனது.

அனைத்துப் பிரச்சினைகளும் சுமுகமாக முடிந்த நிலையில், இன்று உலகம் முழுவதும் இப்படம் மிக பிரம்மாண்டமாக தியேட்டர்களில் வெளியானது.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் உள்ள இரண்டு முக்கிய திரையரங்குகளில் ஜனநாயகன் திரைப்படம் இன்று திரையிடப்பட்டது. காலை முதலே ரசிகர்கள் தியேட்டர்களில் திருவிழாபோலகூடி ஆட்டம், பாட்டத்துடன் கொண்டாடி வந்தனர்.

இந்நிலையில், தமிழக வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தனது கட்சி நிர்வாகிகளுடனும், தொண்டர்களுடனும் கோபிசெட்டிபாளையம் உள்ள திரையரங்கிற்கு வருகை தந்தார்.

கரட்டடிபாளையம் பகுதியில் உள்ள ஜெயம் திரை அரங்கிற்கு ரசிகர்களின் பலத்த கோஷங்களுக்கு இடையே, ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார், பின்னர் கிரேன் மூலம் அமைச்சர் செங்கோட்டையனுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் ரசிகர்களுக்கு இனிப்புகளை வழங்கிய செங்கோட்டையன் தியேட்டரில் அமர்ந்து பொதுமக்களுடனும், கட்சியினருடனும் இணைந்து திரைப்படத்தை ரசித்துப் பார்த்தார்.

படத்தை காண வந்த ரசிகர்கள் கூட்டமாக வந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு திரையரங்கின் கண்ணாடியால் அமைக்கப்பட்டிருந்த வாயிற் கதவு சுக்கு நூறாக நொறுங்கியது. இதில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

படம் பார்க்க வந்திருந்த ரசிகர்களை நேரில் சந்தித்த அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார். முதலமைச்சரின் கடைசிப் படம் தியேட்டருக்கு வந்துள்ளதால் உற்சாகத்தில் இருந்த ரசிகர்களுக்கு, அமைச்சரே நேரில் வந்து இனிப்பு வழங்கியது மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அமைச்சருடன் கட்சி முக்கிய பிரமுகர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூரில் தமிழக வெற்றி கழகத்தில் ஆயிரம் பெண்கள் இணைப்பு - நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன

சென்னை, ஜூலை 24

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் ஜே.ஜே. நகரில், "ஜனநாயகன்" திரைப்பட வெளியீட்டை கொண்டாடும் வகையில் தமிழக வெற்றி கழகம் சார்பில் உற்சாக விழா நடைபெற்றது. மாவட்ட மகளிர் அணி நிர்வாகி சுமித்ரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ. செந்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, ஆயிரம் பெண்களை தமிழக வெற்றி கழகத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டார்.




இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் 500 பெண்களுக்கு புடவைகள், 500 பேருக்கு பிரியாணி, மேலும் 50 குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பேனாக்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் திருவொற்றியூர் 3வது வார்டு நிர்வாகிகள் சதீஷ் பாபு, தீபா உள்ளிட்டோர் மற்றும் மாவட்ட, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள்,

கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# FL 2 பார்களுக்கான உரிமம் கட்டணம் 30 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் கிளப் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 25

FL 2 பார்களுக்கான உரிமம் கட்டணம் 30 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் கிளப் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.




சென்னை சேப்பாக்கம் பத்திரிக்கையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்த அச்சங்கத்தின் நிர்வாகிகள், தமிழகத்தில் எப்எல் 2 பாடுகளுக்கும் எஃப் எல் 3 பார்களுக்கும் ஒரே அளவிலான நேரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினர். 15 லட்சம் ரூபாயாக இருந்த எஃப் எல் டு பார்களுக்கான உரிமம் கட்டணத்தை, தற்போதைய தமிழக அரசு 30 லட்சம் ரூபாயாக உயர்த்தி விட்டதாகவும் இது அனைத்து பார் உரிமையாளர்களுக்கும் பெரும் சுமையாக இருப்பதாகவும் தெரிவித்தனர். எனவே 30 லட்சம் ரூபாய் என்ற கட்டணத்தை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்கத்தின் மாநில தலைவர் சரவணன் வலியுறுத்தியுள்ளார்.

பேட்டி சரவணன் தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் கிளப் உரிமையாளர்கள் சங்கம்

அது மட்டுமல்லாமல் புதிய பார்களுக்கான அனுமதியை விரைவாக வழங்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், ஒற்றை சாலர முறையில் அனுமதி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

என்றும் அவர் வலியுறுத்தினார்.

# மத்திய கல்வி மந்திரி பதவி விலக வலியுறுத்தி 27ந்தேதி விசிக ஆர்ப்பாட்டம் திருமாவளவன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 25

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நீட் தேர்வுக்கானவினாத்தாள் கசிவுக்குப் பொறுப்பேற்று கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவு விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து புதுடெல்லியில் மாணவர்களும், இளைஞர்களும் போராடி வருகின்றனர். இது தொடர்பாக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நடத்திய பேரணியில் மோடி அரசின் காவல்துறை கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளது. ஏராளமான மாணவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாணவர்கள், இளைஞர்கள் மீது ஏவப்பட்ட கண்மூடித்தனமான வன்முறையைக்கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதி மாவட்டங்களிலும் ஜூலை 27 திங்களன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தர்மேந்திர பிரதான் கல்வி மந்திரி ஆனதற்குப் பிறகு நீட் தேர்வு உள்ளிட்ட பல்வேறு நுழைவுத் தேர்வுகள் மற்றும் தகுதித் தேர்வுகளுக்கான வினாத் தாள்கள்152முறைகசிந்து, பலமுறை தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டு சுமார் ஏழரை கோடி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் சில மாணவர்கள்தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதற்குப் பொறுப்பேற்க வேண்டிய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதானோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார்.

"கல்வித் துறையைச் சீரழிக்கும் மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்" என்று மாணவர்கள் தன்னெழுச்சியாகக் கிளர்ந்தெழுந்து போராடி வருகின்றனர். அண்மையில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நாடாளுமன்றம் நோக்கி பேரணி ஒன்றை அறிவித்தது. நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஆரம்பித்த ஜூலை 20ம் நாள் டெல்லியில் அந்தப் பேரணி அறிவிக்கப்பட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும், இளைஞர்களும் அதில் பங்கேற்றனர். அந்தப் பேரணியைத் தடுப்பதற்கு வரலாறு காணாத அளவில் டெல்லியின் வீதி தோறும் காவல் துறையினர் குவிக்கப்பட்டனர். பேரணியில் பங்கேற்ற மாணவர்களையும், இளைஞர்களையும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், தடியால் அடித்தும் காவல்துறையினர் தாக்கியுள்ளனர். சீருடை அணியாத சில குண்டர்கள் தடிகளை ஏத்தி மாணவர்களைத் தாக்கிய காட்சிகள் ஊடகங்களில் வெளியாயின. காயம்பட்ட மாணவர்களை நேரில் சென்று விசாரித்தபோது அவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களை சிவில் உடையில் வந்து யார் தாக்கியது என்பதைப் பற்றி இதுவரை டெல்லி காவல் துறை விளக்கம் அளிக்கவில்லை. பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் பலர் கை, கால்களில் முறிவு ஏற்பட்டும், தலையில் காயம் அடைந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறு காயங்களோடுநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் டெல்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் பலர் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதை இதுவரை காவல் துறை தெரிவிக்கவில்லை. அவர்களைச் சந்திப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவும் இல்லை. இதற்காக நீதி கேட்டு பிரதமர் இல்லத்துக்கு முன்பு கூடி போராட்டத்தில் ஈடுபட்ட மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் காங்கிரஸ் எம்பிக்களும் காவல்துறையினரால் மோசமாக நடத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர். மோடி அரசு முற்றிலும் ஒரு சர்வாதிகார அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது. ஜனநாயக மாண்புகள் படுகொலை செய்யப்பட்டுள்ளன.



போராடிவரும் மாணவர்களின் கோரிக்கைகளான கல்வி மந்திரி தர்மேந்தர பிரதான் பதவி விலக வேண்டும்; போராடிய மாணவர்கள் மீது வன்முறைத் தாக்குதலை நடத்தியவர்கள் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும்; இது தொடர்பாக பிரதமர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் ஆகியவற்றை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆதரிக்கிறது. நீட் தேர்வை முற்றாக ரத்து செய்ய வேண்டும்; மாநில அரசுகளே மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வை நடத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்தும், அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை வலியுறுத்தியும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஜூலை 27ம் தேதி திங்களன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள சட்டமன்றத் தொகுதி மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம். அதில் ஜனநாயக சக்திகளும் திரளாகப் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கொண்டாட்டத்தை தெறிக்கவிட்ட த.வெ.க நிர்வாகிகள்! 'ஜனநாயகன்' ரிலீஸில் மக்களுக்கு பிரியாணி, புடவை, அரிசி அள்ளி வழங்கி அசத்தல்

காஞ்சிபுரம், ஜூலை 25

உலகமெங்கும் இன்று வெளியாகி திரையரங்குகளை அதிர வைத்துக் கொண்டிருக்கும் 'தளபதி' விஜய் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படம், தமிழகம் முழுவதும் கட்சி நிர்வாகிகளாலும் பொதுமக்களாலும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.



இதன் ஒரு பகுதியாக, காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், ஒரகடத்தில் உள்ள திரையரங்கில் தமிழக வெற்றிக்குக கழகத்தின் சார்பில் பிரம்மாண்டக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இத்த நிகழ்ச்சியை காஞ்சிபுரம் மாவட்டம் இளைஞ்சர் அணி வடக்கு மாவட்ட செயளாலர் படப்பை PKB கோபி ஏற்பாடு செய்திருந்தார்

இந்நிகழ்வின் போது, திரைப்படம் பார்க்க வந்த 100 ரசிகர்களுக்கு முற்றிலும் இலவச டிக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

மேலும், படம் பார்த்து விட்டு திரையரங்கை விட்டு வெளியே வந்த பொதுமக்கள் மற்றும் ரசிகர்கள் அனைவருக்கும் சுடச்சுடச் சுவையான பிரியாணி,

இனிப்புகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டு அசத்தப்பட்டது.

இதுமட்டுமன்றி, அப்பகுதியைச் சேர்ந்த 1,600 க்கும் மேற்பட்ட ஏழை, எளிய பொதுமக்களுக்கு இலவச மற்றும் தாகம் தீர்க்க ஜில்லென்ற சர்பத், குளிர்பானங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் அள்ளிக் கொடுக்கப்பட்டன.

தளபதி விஜய்யின் 'ஜனநாயகன்' ரிலீஸை வெறும் திரைப்படக் கொண்டாட்டமாக மட்டும் இல்லாமல், ஏழை எளிய மக்களுக்கு உதவும் நலத்திட்ட விழாவாக மாற்றி அசத்திய ஒரகடம் த.வெ.க நிர்வாகிகளின் இந்தச் செயலை அப்பகுதி பொதுமக்கள் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

# திடீரென வெடித்து சிதறிய குளிர்சாதனப் பெட்டி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய இளைஞர்கள்

சென்னை, ஜூலை 25

சென்னை தாம்பரம் அடுத்த முடிச்சூர் கோஆப்டெக்ஸ் காலனியில், குளிர்சாதனப் பெட்டி திடீரென தீப்பற்றி வெடித்து சிதறிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சந்தோஷ், ஸ்ரீதர் உள்ளிட்ட 8 இளைஞர்கள் அப்பகுதியில் வாடகை அறை எடுத்து தங்கி, தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றனர்.

நேற்று இரவு பணியை முடித்துவிட்டு சந்தோஷ் மற்றும் ஸ்ரீதர் ஆகிய இருவரும் இன்று அறையில் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அறை முழுவதும் கரும்புகை சூழ்ந்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள்உடனடியாகவெளியே வந்து பார்த்தபோது, குளிர்சாதனப் பெட்டி தீப்பற்றி கரும்புகையுடன் எரிந்து கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

தீயை அணைக்கும் நோக்கில் அவர்கள் தண்ணீர் ஊற்ற முயன்றபோது, குளிர்சாதனப் பெட்டி திடீரென பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதனால் மேலும் ஆபத்து ஏற்படும் முன்பே இருவரும் அறையை விட்டு பாதுகாப்பாக வெளியேறினர்.

பின்னர் உடனடியாக தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், தீயை விரைவாக கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர்.

சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அறையில் இரண்டு பேர் மட்டுமே இருந்ததால், பெரிய உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இருப்பினும் குளிர்சாதனப் பெட்டி மற்றும் அறையில் இருந்த சில பொருட்கள் தீயில் சேதமடைந்தன.

மின்கசிவு அல்லது தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குளிர்சாதனப் பெட்டி வெடித்து சிதறிய இந்த சம்பவம், முடிச்சூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அரசுப்பள்ளி மாணவர்களை ஊழியர்களாக நடத்தும் அவலம் எப்போது தான் மாறும்? நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூலை 25

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

கடந்தசிலதினங்களுக்கு முன்பு, தவெக அமைச்சர் தமிழன்பார்த்திபன் "குழந்தைகள்பள்ளிகளைசுத்தம் செய்வதில் எந்தவொரு தவறும் இல்லை" என்ற ரீதியில் பேசியது கடும் விமர்சனத்திற்குள்ளான நிலையில், தற்போது திருப்பத்தூர் மாவட்டம் கேதாண்டப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏற்பட்ட கழிவுநீர் அடைப்பை சரி செய்யும் பணியில், அங்கு படிக்கும் மாணவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ள சம்பவம் கடும்



கண்டனத்திற்குரியது.

அதிலும் தாங்கள் சுரண்டப்படுகிறோம் என்பது கூட தெரியாமல், "எங்கள் தலைமை ஆசிரியர் தான் செய்ய சொன்னார், பள்ளியில் எப்போதுமே இந்த வேலையை நாங்கள் தான் செய்வோம்" என அப்பாவித்தனமாகக் கூறும் அம் மாணவர்களைக் காண்கையில் ஒரு தந்தையாக நெஞ்சம் கனத்துப் போகிறது. படிக்கும் பிள்ளைகளை, இப்படி துப்புரவுப் பணிகளில் ஈடுபடுத்துவது, மனிதாபிமானமற்றது மட்டுமன்றி குழந்தைகளின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது.

எனவே, "உங்கள் விஜய் மாமா" என்று தன்னைத் தானேவிளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் முதல்அமைச்சர் விஜய், அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் தேவையான துப்புரவுப் பணியாளர்களை நியமித்து, அரசுப்பள்ளி மாணவர்களின் கண்ணியத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்! மேலும், தனியார் பள்ளிகளை மட்டும் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அரசுப்பள்ளிகளில் இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிக்கெட் முன்பதிவு செய்த பயணிகளே கவனம்: சென்னை மும்பை ரெயில் 4 நாட்கள் ரத்து

சென்னை, ஜூலை 24

மும்பை கோட்டத்தில் தண்டவாள பராமரிப்பு பணி காரணமான சென்னை எழும்பூர் மும்பை இடையே இயக்கப்படும் ரெயில் 4 நாட்கள் ரத்து செய்யப்படுவதாக மத்திய ரெயில்வே தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை எழும்பூரில் இருந்து மும்பைக்கு ஜூலை 25 முதல் ஜூலை 28ந் தேதி வரை காலை 6.35 மணிக்கு புறப்பட வேண்டிய எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 22158) முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது.

மறுமார்க்கத்தில், மும்பையில் இருந்து சென்னை எழும்பூருக்கு



ஜூலை 25 முதல் ஜூலை 28ந் தேதி வரை இரவு 10.52 மணிக்கு புறப்பட வேண்டியரெயில் (22157) முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விசாரணைக் கைதி சபரிவர்மன் கொலை வழக்கு: சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை

கன்னியாகுமரி, ஜூலை 25

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே உள்ள ஈத்தங்காட்டை சேர்ந்தவர் சபரிவர்மன் (வயது 33). மாற்றுத்திறனாளி வியாபாரியான இவர் தனது வீட்டின் அருகே பெட்டிக்கடை நடத்தி வந்தார். அவரது கடையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் வைத்திருந்ததாக கூறி, தென்தாமரைக்குளம் போலீசார் கடந்த 9ந்தேதி சபரிவர்மனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அங்கு விசாரணை கைதியாக அடைக்கப்பட்டிருந்த அவர், கடந்த 13ந்தேதி சிறையில் வைத்தே அடித்துக் கொல்லப்பட்டார். அவரை சிறை வார்டன்கள் 3 பேர் மற்றும் 8 விசாரணை கைதிகள் சேர்ந்து கை கால்களை கட்டிப்போட்டு கொடூரமான முறையில் அடித்து கொலை செய்தது விசாரணையில் தெரிய வந்தது.

இதுகுறித்து நேசமணிநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து நாகர்கோவில் சிறையின் வார்டன், தலைமை வார்டன், சிறைக் காவலர் மற்றும் 8 கைதிகள் என மொத்தம் 11 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிறை காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்



பட்டு, நாங்குநேரி கிளை சிறையில் அடைக்கப்பட்டனர். நாகர்கோவில் சிறையில் இருந்த 8 கைதிகளிடம் தனிப்படை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து அந்த 8 கைதிகளும், பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் சபரிவர்மன் கொலையில் கைது செய்யப்பட்டிருக்கும் கைதிகளில் அரவிந்த், அஜய் மற்றும் ஜெகன் ஆகிய 3 பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் முடிவு செய்தனர். இதற்காக போலீசார் தரப்பில் நாகர்கோவில் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதே நேரத்தில் சபரிவர்மன் கொலை நடந்த நாகர்கோவில் சிறையில் தடயவியல் நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அவர்கள் சபரிநாதன் கொலை நடந்த அறையில் இருந்து தடயங்கள் மற்றும் ரேகைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே சபரிவர்மனின் செல்போன் மாயமாகியிருக்கும் விவரம் வெளியானது. அந்த செல்போனில் சில முக்கிய வீடியோ ஆதாரங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. அவரது செல்போன் யாரிடம் உள்ளது? என்பது தெரியாத நிலையில், அதை தேடி கண்டுபிடிக்கும் பணியிலும் போலீசார் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சபரிவர்மன் கொலை வழக்கை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றி தமிழக டி.ஜி.பி. உத்தரவு பிறப்பித்தார். இதைத்தொடர்ந்து சபரிவர்மன் கொலை வழக்கு விசாரணை உடனடியாக கன்னியாகுமரி மாவட்ட சி.பி.சி.ஐ.டி. போலீசுக்கு மாற்றப்பட்டது. சபரிவர்மன் கொலை வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சி.பி.சி.ஐ.டி. போலீசாரிடம், நேசமணி நகர் போலீசார் ஒப்படைத்தனர்.

இந்தநிலையில் அதனை பெற்றுக்கொண்ட சி.பி.சி.ஐ.டி. போலீசாரின் விசாரணை நேற்று தொடங்கியது. துணை போலீஸ் சூப்பிரண்டு நவராஜ்ராஜ்குமார் தலைமையில் நெல்லை இன்ஸ்பெக்டர்கள் மரிய பிரான்சிகா, உலகராணி மற்றும் போலீசார் குழுக்களாக பிரிந்து விசாரணை நடத்த ஆயத்தமானார்கள்.

அதன்படி கொலை சம்பவம் நடந்த நாகர்கோவிலில் உள்ள மாவட்ட சிறைக்கு சென்று விசாரித்தனர். சபரிவர்மன் அடைக்கப்பட்டிருந்த அறையை பார்வையிட்ட அவர்கள், அங்கு சில தகவல்களை கேட்டறிந்தனர். சிறைச்சாலையில் விசாரணை மற்றும் சம்பவம் நடைபெற்ற சிறை அறையில் கேமரா மூலமும் பதிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து சபரிவர்மனின் மனைவி ஆனந்தவல்லி மற்றும் அவரது குடும்பத்தினர், உறவினர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. வியாபாரி கொலை வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கையிலெடுத்ததால், மீண்டும் இந்த வழக்கு விசாரணை சூடுபிடித்துள்ளது.

## கீழடியில் மீன் உருவம் பொறித்த பானை கண்டெடுப்பு

திருப்புவனம், ஜூலை 25

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் யூனியனை சேர்ந்த கீழடி பகுதியில் மத்தியமாநில அரசுகள் சார்பில் ஏற்கனவே 10 கட்ட அகழாய்வு பணிகள் நடந்து முடிந்துள்ளது. 2,600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் கிடைக்கப்பெற்று கீழடியில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், சுற்றுலா பயணிகள், பள்ளி மாணவ மாணவி கள் என தினமும் ஏராளமானோர் வந்து பார்வையிட்டும், 'செல்பி' எடுத்தும் மகிழ்கின்றனர். இதேபோல் கீழடியில் அக



ழாய்வு நடைபெற்ற இடத்திலேயே திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திறந்தவெளி அருங்காட்சியகத்தை தினமும் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள், மாணவ, மாணவிகள், வெளிநாட்டினர் என பார்வையிட்டு வருகின்றனர்.

11வது கட்ட அகழாய்வு

கீழடி 11ஆம் கட்ட அகழாய்வில் மீன் உருவம் பொறித்த பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 9 குழிகள் தோண்டப்பட்டு உறை கிணறுகள், சுடுமண பானைகள், சுருள வடிவ, பீப்பாய் வடிவ, மூடிய நிலையில், திறந்த நிலையில் வடிகால் அமைப்புகள், செங்கல் கட்டுமானங்கள்உள்ளிட்டபொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன.

முதன் முதலில் தோண்டப்பட்ட குழியில் 160 செ.மீ., ஆழத்தில் 20 செ.மீ., விட்டமும், ஒரு அடி உயரமும் கொண்ட இரு நிற சுடுமண் பானை முழுமையாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. பானையின் மேற்பகுதியில் மீன் உருவம் கோட்டு சித்திரமாக வரையப்பட்டுள்ளது. ஏற்கனவே கீழடியில் மீன் உருவம் பதித்த உறை கிணறு, பானை ஓடு உள்ளிட்ட பொருட்கள் கிடைத்தன.

2 ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முன் கல்வியில் சிறந்து விளங்கிய சமுதாயமாக கீழடி மக்கள் விளங்கி இருக்க கூடும் என்பதற்கு சான்றாக இவை கருதப்படுகின்றன.

## முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கு: ஆக., 24ம் தேதிக்கு ஒத்திவைப்பு

புதுக்கோட்டை, ஜூலை 25

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்ட மன்ற தொகுதியில் வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், 2016ல் இருந்து 2021 வரைஅமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் தனது மனைவி ரம்யா பெயரிலும்,

தனது பெயரிலும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் கடந்த 2021ல் வழக்குப்பதிவு செய்தனர்.

நாளை விஜயபாஸ்கருக்கு சொந்தமான வீடு, கல்குவாரி, அலுவலகம் உள்பட தமிழகம் முழுவதும் 56 இடங்களில் ஊழல் தடுப்பு போலீசார் சோதனை நடத்தினர். இந்த வழக்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில்



விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கு விசாரணையின் போது, விஜயபாஸ்கர், ரம்யா ஆகியோர் அவ்வப்போது நீதிமன்றத்தில் ஆஜராகி வந்தனர்.

இதன்படி சி.விஜயபாஸ்கர் மற்றும் அவர் மனைவி மீதான சொத்துக்குவிப்பு வழக்கு புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் நடந்துவரும் நிலையில், இன்றைக்கு வழக்கு விசாரணையில் இருவரும் ஆஜராகவில்லை. இதனை அடுத்து வழக்கு விசாரணை அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 24ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

## டெல்லியில் இளைஞர்கள் மீதான தாக்குதல்: மன்னார்குடியில் வகுப்புகளை புறக்கணித்து கல்லூரி மாணவர்கள் போராட்டம்

திருவாரூர், ஜூலை 25

டெல்லியில் இளைஞர்கள் மீதான தாக்குதலை கண்டித்து திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் வகுப்புகளை புறக்கணித்து கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

டெல்லியில் நீட் தேர்வு முறைகேடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்திய இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மீது போலீசார் கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் தடியடி போன்ற தாக்குதல்கள் நடத்தினர்.

இதனைக் கண்டிக்கும்



விதமாக பல்வேறு இடங்களில் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதையடுத்து மத்திய அரசின் செயலுக்கு மன்னார்குடி மாணவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி கல்லூரிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் வகுப்புகளைப் புறக்கணித்தனர். மேலும் கல்லூரி வளாகத்திற்கு வெளியே திரண்ட மாணவர்கள், டெல்லி போலீசாருக்கு எதிராகவும், மாணவர் நலனைப் பாதுகாக்கக் கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

பல்வேறு மாணவர் அமைப்புகள் விடுத்துள்ள நாடு தழுவிய போராட்ட அழைப்பின் ஒரு பகுதியாகவே மன்னார்குடியில் இந்த போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தால் மன்னார்குடி கல்வி நிறுவனப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி: கடைகளில் 240 கிலோ தடை செய்த பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் ரூ.13 ஆயிரம் அபராதம்

தூத்துக்குடி, ஜூலை 25

தூத்துக்குடி கிழக்கு மண்டலப் பகுதி கடைகளில் மாநகராட்சி அதிகாரிகள் நடத்திய சோதனையில் 240 கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.13 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சி கமிஷனரின் உத்தரவின் பேரில், கிழக்கு மண்டல



சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அடங்கிய குழுவினர்தீவிர சோதனையில் ஈடுபட்டனர். குறிப்பாக வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் அதிகம் நிறைந்த மட்டக்கடை, டபிள்யூ.ஜி.சி. சாலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு கடைகளில் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது, விதிகளை மீறி பயன்படுத்த வைக்கப்பட்டிருந்த 240 கிலோ எடையுள்ளதடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் பொருட்களை பயன்படுத்திய வணிகர்களுக்கு மொத்தம் ரூ.13,000 அபராதம் விதிக்கப்பட்டு உடனடியாக வசூலிக்கப்பட்டது. பொதுமக்களும், வணிகர்களும் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களைத்தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பு அளிக்கும் துணிப் பைகளை பயன்படுத்த வேண்டும் என்றும், விதிகளை மீறினால் கடுமையான நடவடிக்கை தொடரும் என்றும் மாநகராட்சி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

## சிவந்தாகுளம் டாஸ்மாக் கடையை இடமாற்றம் செய்ய வலியுறுத்தி சி.பி.எம். காத்திருப்பு போராட்டம்

தூத்துக்குடி, ஜூலை 25

தூத்துக்குடி சிவந்தாகுளம் குடியிருப்பு பகுதியில் செயல்பட்டு வரும்டாஸ்மாக்கடையை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கடை முன்பு காத்திருப்பு போராட்டம் நடந்தது.

தூத்துக்குடி சிவந்தாகுளம் 5வது தெருவில் இயங்கி வரும் டாஸ்மாக் மதுபானக் கடையால், அப்பகுதியில் சென்று வரும் பள்ளி மாணவர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தொடர்ச்சியாக பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருவதால், அந்த டாஸ்மாக்கடையைவேறு



இடத்திற்கு உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தி வந்தனர்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டாஸ்மாக் கடை முன்பு நேற்று காத்திருப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இந்த போராட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி நகரக் குழு உறுப்பினர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாநகர செயலாளர் முத்து கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அர்ச்சுனன், ராஜா, மூத்த நிர்வாகிகள் பொன்ராஜ், மணவாளன் உள்ளிட்ட திரளான கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டனகோசங்களை எழுப்பினர்.

போராட்டம் தீவிரமடைந்ததை தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், வருவாய்த்துறையினர் மற்றும் டாஸ்மாக் அதிகாரிகள் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின் போது, இந்த பிரச்சினை தொடர்பாக வரும் 27ம் தேதி உதவி கலெக்டர் தலைமையில் சமாதான கூட்டம் நடத்தி, உரிய தீர்வு காணப்படும் என அதிகாரிகள் உறுதி அளித்தனர். அதிகாரிகளின் இந்த உறுதியை ஏற்றுக்கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தங்களது காத்திருப்பு போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவின் பேரில் கோவில் ஊழியர்கள் இருவர் சஸ்பெண்ட்

திருச்சி, ஜூலை 25

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷின் உத்தரவின்பேரில் சமயபுரம் கோவில் அலுவலர், வடபழனி கோவில் இளநிலை உதவியாளர் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக ரமேஷ் பொறுப்பேற்றதில் இருந்து தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கோவிலுக்கும் நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் வடபழனி கோவில் இளநிலை உதவியாளர், சில நிர்வாக ஒழுங்கின்மைகளில் ஈடுபட்டதாகவும் சமயபுரம் கோவில் அலுவலர் வருமானத்திற்கு அதிகமாக சொத்துகள் வாங்கியதாகவும் புகார்கள் எழுந்தது.



இதனையடுத்து இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவின் பேரில் அவர்கள் இருவரையும் சஸ்பெண்ட் செய்துள்ளனர். கோவில்களில் முறைகேடுகளைத் தடுத்து, பக்தர்களுக்கான அடிப்படை உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்களை மேம்படுத்த இந்த நடவடிக்கைகள் தொடர்கின்றன.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

25.07.2026

# திருப்பூர்: காவலர் குடியிருப்பில் பெண் போலீஸ் தூக்குப்போட்டு தற்கொலை



திருப்பூர், ஜூலை 25

திருப்பூர் ஆயுதப்படையில் பணிபுரிந்த பெண் போலீஸ், காவலர் குடியிருப்பில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டதற்கு பணிச்சுமை காரணமா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தைச் சேர்ந்த ராஜாவின் மகள் ரஞ்சனி (வயது24). கடந்த 2022ம் ஆண்டு போலீஸ் வேலையில் சேர்ந்தார். கடந்த 4 ஆண்டுகளாக திருப்பூர் ஆயுதப்படையில் பணியாற்றி வந்தார். அங்குள்ள நல்லூர் காவலர் குடியிருப்பில் தங்கி பணிபுரிந்து வந்த ரஞ்சனி, நேற்று காலை வழக்கம்போல் பணிக்குச் சென்றார். பின்னர் 10.30 மணியளவில் வீட்டுக்கு வந்த அவர் திடீரென சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை கொண்டார்.

அதற்கு முன்னதாக, குடியிருப்புக்கு திரும்பிய ரஞ்சனி, யாருடனோ செல்போனில் ஆவேசமாகப் பேசியபடி வந்துள்ளார். பின்னர், தன் அறைக்குச் சென்று கதவை உள்புறமாகப் பூட்டிக்கொண்டவர், முன் பழகிய பெண் போலீஸ்ஒருவருக்குத்தொடர்புகொண்டு தற்கொலை செய்யப்போவதாகக் கூறியுள்ளார். இதனால் பதறிய அந்த பெண் போலீஸ், குடியிருப்புவாசிகளுக்குத் தகவல் தெரிவித்தார். அவர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது, ரஞ்சனி தூக்கில் தொங்குவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் அவரை மீட்டு, திருப்பூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.


இந்தசம்பவம்குறித்து நல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ரஞ்சனியின் அறை அலங்கோலமாகக் கிடந்தது. அங்கிருந்த பொம்மைகள் மற்றும் பொருட்கள் உடைக்கப்பட்டிருந்தன. இதனால் அவர் கடும் மன உளைச்சலில் இருந்தது தெரிய வந்தது.

ரஞ்சனியின் செல்போன் பூட்டப்பட்டுள்ளதால், அதை ஆய்வு செய்ய நிபுணர்களின் உதவி நாடப்பட்டுள்ளது. அவருடன் ஒரே ஆண்டில் பணியில் சேர்ந்த ஒரு காவலருடன் அவருக்குப் பழக்கம் இருந்ததாகக் கூறப்படும் நிலையில், காதல் தகராறு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதா? அல்லது பணிச்சுமையா? என்ற கோணங்களில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



ஈரோட்டில் இரண்டாவது நாளாக வலுக்கட்டாய கைது டெல்லியில் போராடும் மாணவர்களுக்கு அதரவாக ஈரோடு சம்பத் நகரில் உள்ள திருப்பூர் குமரன் சிலை கீழே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய மாணவர் சங்கம் மற்றும் ஜனநாயக வாலிபர் சங்கத்தினரை வலுக்கட்டாயமாக கைது செய்த போலீசார்

# தூத்துக்குடியில் கொடூரம்: குடிபோதை தகராறில் தொழிலாளி வெட்டிக்கொலை



தூத்துக்குடி, ஜூலை 26

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் பகுதியில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில், டைல்ஸ் ஒட்டும் தொழிலாளி வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் அருகே உள்ள கச்சேரி தளவாய்புரம் கிராமம், மேற்கு தெருவைச் சேர்ந்த மாரியப்பன் மகன் மலைராஜ் (வயது 30). திருமணம் ஆகாத இவர், டைல்ஸ் ஒட்டும் தொழில் செய்து வந்தார். நேற்று இரவு மலைராஜ், கச்சேரி தளவாய்புரம் கிராமத்தின் அருகே உள்ள காட்டுப்பகுதியில் தனது நண்பர்கள் 3 பேருடன் சேர்ந்து மது அருந்தியதாகக் கூறப்படுகிறது. அப்போது அவர்களுக்கு இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டு, தகராறாக மாறியுள்ளது.

அந்த தகராறின்போது ஆத்திரமடைந்த 3 பேரும், தங்களிடம் இருந்த அரிவாளால் மலைராஜை சரமாரியாக வெட்டியுள்ளனர். இதில் படுகாயமடைந்த மலைராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து கொலையாளிகள் 3 பேரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

இதற்கிடையே, இரவில் வீட்டிற்கு வராத மகனைத் தேடி இன்று காலை தந்தை மாரியப்பன் சென்றுள்ளார். அப்போது காட்டுப்பகுதியில் மலைராஜ் ரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து கதறி அழுதார். உடனடியாக இதுகுறித்து ஓட்டப்பிடாரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்த தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தலைமையிலான போலீசார், மலைராஜின் உடலை கைப்பற்றி உடற்கூறாய்விற்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த ஓட்டப்பிடாரம் போலீசார், தப்பி ஓடிய 3 பேரையும் தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர். இந்த கொடூர கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (25.07.2026)

**மேஷம்:** இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வாகனப் பயணங்களிலும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதிலும் கவனம் தேவை. பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**ரிஷபம்:** வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபமும், உறவினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்

**மிதுனம்:** குடும்பத்தில் புரிதலும் அமைதியும் கூடும். சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களின் அறிமுகம் கிடைக்கும். வியாபார ரீதியாக நீங்கள் எடுக்கும் புதிய முடிவுகள் சாதகமான பலனைத் தரும்.

**கடகம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நிலுவையில் இருந்த காரியங்கள் விரைந்து முடியும். புதிய வாகனம் அல்லது பொருட்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**சிம்மம்:** சாதுர்யமான பேச்சால் காரியங்களைச் சாதிப்பீர்கள். நீண்ட நாள் கடன் பிரச்சினைகள் குறைய வழி பிறக்கும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** சொத்து அல்லது வாகனம் வாங்குவது குறித்த திட்டமிடுதல் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை குறைந்து நிம்மதி நிலவும். வெளியூர் பயணங்களால் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** எதிலும் நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள். யாருக்கும் ஜாமீன் அல்லது சாட்சி கையெழுத்து போட வேண்டாம். தேவையற்ற செலவுகளும், அலைச்சலும் வரக்கூடும் என்பதால் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** பிள்ளை வழியில் சுபச்செய்திகளும் பெருமையும்தேடிவரும். நீண்டநாட்களாக வரவேண்டிய நிலுவைத் தொகைகள் கைக்கு வந்து சேரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான சூழல் நிலவும்.

**தனுசு:** தள்ளிப்போன சுபகாரியங்கள் கைகூடி வரும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களின்ஆதரவுகிடைக்கும். புதிய ஆடைகள், ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்:** பழைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். தந்தை வழியில் அனுகூலமான ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் பொறுப்பான நடந்து கொள்ளுதல்

**மீனம்:** அலைச்சலும், எதிர்பார்க்காத செலவுகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. வியாபாரம் மற்றும் பண பரிவர்த்தனைகளில் நிதானம் தேவை. வாகன ஓட்டும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

# கள்ளக்குறிச்சி: மின்சாரம் தாக்கி விவசாயி பலி

கள்ளக்குறிச்சி, ஜூலை 25

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே மின்சாரம் தாக்கி விவசாயி பலியானார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள மேலப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் ராமு. விவசாயியான இவர், இன்று (வெள்ளிக்கிழமை) காலை வழக்கம்போல் தனது விவசாய நிலத்திற்கு வேலை செய்வதற்காகச் சென்றார். அப்போது, வயல்வெளியில் உயர் அழுத்த மின்சாரக் கம்பி ஒன்று எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்தது.

அதனை அறியாத விவசாயி நிலத்தில் நடந்து சென்றபோது தரையில் கிடந்த அந்த மின்சாரக் கம்பியை எதிர்பாராமல் மிதித்தார். இதனால் பயங்கரமான உயர் மின்னழுத்த மின்சாரம் அவர் மீது பாய்ந்ததில், தூக்கி வீசப்பட்டார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். அந்த வழியாகச் சென்ற மற்ற விவசாயிகள், ராமு உயிரிழந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து உடனடியாக மின்வாரியத்திற்கும், போலீசாருக்கும் தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் அப்பகுதியில் மின் இணைப்பு உடனடியாகத் துண்டிக்கப்பட்டது. மேலும் சம்பவ இடத்திற்கு விரைந்த சங்கராபுரம் போலீசார், உயிரிழந்த ராமுவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விவசாய நிலத்தில் மின்கம்பி அறுந்து கிடந்தது, மின்வாரிய அதிகாரிகளின் அலட்சியமே காரணம் எனஅப்பகுதிமக்கள்மற்றும்விவசாயிகள் தெரிவித்தனர். இந்த சம்பவம் மேலப்பட்டு கிராம மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் நடிகர் மாதவன்



நீட் தேர்வு முறைகேடு விவகாரம் தொடர்பாக நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், நடிகர் ஆர். மாதவன் மாணவர்களின் உணர்வுகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். கல்வி அமைப்பின் மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், மாணவர்களின் குரலுக்கு ஆதரவு நடிகர் மாதவன் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

கல்விக்கு நம் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஆற்றல் உண்டு; எனவே, நியாயமான, வெளிப்படையான மற்றும் தகுதியின் அடிப்படையில் அமைந்த ஒரு கல்வி முறைக்கு ஒவ்வொரு மாணவரும் தகுதியானவர்கள். இந்திய இளைஞர்களின் அளப்பரிய ஆற்றலை எப்போதும் நம்பி வரும் ஒருவனாக, இன்று பல மாணவர்களும் பெற்றோர்களும் உணரும் கவலையையும் ஏமாற்றத்தையும் நானும் பகிர்ந்துகொள்கிறேன். ஒரு கல்வி முறை என்பது நம்பிக்கை, நேர்மை மற்றும் வாய்ப்புகளை ஊக்கப்படுத்துவதாக இருக்க வேண்டும். தேர்வு வினாத்தாள் கசிவு போன்ற சம்பவங்கள் அந்த நம்பிக்கையைச் சிதைப்பதுடன், எண்ணற்ற இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நம்பிக்கைகள், கடின உழைப்பு மற்றும் கனவுகளைப் பெரிதும் பாதிக்கக்கூடும்; குறிப்பாக, மக்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் கல்வி மிக முக்கியப் பங்காற்றும் இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் இது மிகவும் முக்கியமானது.

இதற்குக் காரணமானவர்கள் எவராயினும், அவர்கள் மீது விரைவாகவும் உறுதியாகவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை நான் வலியுறுத்துகிறேன். தண்டனைகள் எவ்வளவு உறுதியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும் என்றால், இனி யாரும் நம் இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கத் துணியவே கூடாது. இச்சம்பவம் தொடர்பாக கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், நமது அரசாங்கம் தேவையான சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்து, கல்வி முறையை வலுப்படுத்தி, வருங்கால சந்ததியினருக்காகக் கல்வியின் மாண்பைக் காக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கவலையோ அல்லது மனச்சோர்வோ அடைந்திருக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும் நான் சொல்வது இதுதான்: தயவுசெய்து நம்பிக்கையை இழக்காதீர்கள். எந்தவொரு அமைப்பின் குறைபாடுகளையும் விட உங்கள் திறமை, விடாமுயற்சி மற்றும் நற்பண்புகள் மிகச் சிறந்தவை. தொடர்ந்து கடினமாக உழையுங்கள், உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள்; தற்காலிகத் தடைகள் உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்.

அர்த்தமுள்ள சீர்திருத்தங்களுக்காக அமைதியான முறையில் கோரிக்கை விடுவோரின் மன உறுதியையும் விடாமுயற்சியையும்நான்பாராட்டுகிறேன்.அதேவேளையில்,உங்கள்போராட்டத்தைக்கைப்பற்றிஅதன்உண்மையான நோக்கத்திலிருந்து திசைதிருப்ப முயலக்கூடிய சுயநல சக்திகளிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொருகுடிமகனும்தங்கள்கருத்துக்களைஅமைதியாகவும்பொறுப்புடனும்வெளிப்படுத்துவதற்கானஉரிமையை நான்மதிக்கிறேன். இளைஞர்களுடன்உறுதியாக நிற்பதும், அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை ஆதரிப்பதும், நேர்மறையான மாற்றத்தை ஊக்குவிக்க எனது குரலைப் பயன்படுத்துவதுமே எனது வழிமுறையாகும். நாட்டிற்குச் சேவை செய்யும் பொறுப்பில் உள்ளவர்களின் நல்வாழ்வு மற்றும் ஞானத்திற்காக நான் எப்போதும் மரியாதை செலுத்தி, ஆதரவளித்து, பிரார்த்தனை செய்து வருகிறேன்; ஏனெனில், நாம் அனைவரும் இணைந்து இந்தியாவிற்கு வலிமையான மற்றும் ஒளிமயமானஎதிர்காலத்தைஉருவாக்கமுடியும்என்றுநான்நம்புகிறேன். ஜெய் ஹிந்த். இவ்வாறு அதில்தெரிவித்துள்ளார்.

# இணையத்தில் 'லீக்' ஆனாலும் 'பீக்' குறையவில்லை: 'ஜனநாயகன்' முதல் நாள் வசூல் எவ்வளவு தெரியுமா?

இணையத்தில் 'லீக்' ஆனாலும் 'பீக்' குறையாத வகையில் 'ஜனநாயகன்' திரைப்படம் வசூலில் வாரி குவித்து வருகிறது. முதல் நாள் வசூல் குறித்த தகவல்களும் வெளியாகியுள்ளன. தமிழக திரையுலகில் உச்ச நட்சத்திரமாக ஜொலித்த விஜய், அரசியலில் காலடி எடுத்து வைத்ததால், சினிமாவை விட்டு விலகுவதாக அறிவித்தார். அவருடைய 69வது மற்றும் கடைசிப்படமான 'ஜனநாயகன்', மிகுந்த எதிர்பார்ப்புக்கும், கடும் போராட்டத்திற்கு மத்தியில் உலகம் முழுவதும் நேற்று (ஜூலை 23) வெளியானது. ஏற்கனவே, 'ஜனநாயகன்' இணையத்தில் எச்.டி. தரத்தில் வெளியானதால், தியேட்டர்களில் ஆர்ப்பரிப்பு இருக்காது என்று கருதப்பட்டது. ஆனால், ரசிகர்கள்படைபலத்தால், ஆட்டம்.. பாட்டம்.. கொண்டாட்டம்.. என தியேட்டர்கள் களைகட்டின. உலகம் முழுவதும் 'ஜனநாயகன்' திரைப்படம் 7,400 தியேட்டர்களில் ரிலீஸ் ஆனது. இந்தியாவில் மட்டும் 5,300 தியேட்டர்களில் வெளிவந்தது. குறிப்பாக, தமிழகத்தில் 1,250 தியேட்டர்களில், 2,700 திரைகளில் வெளியிடப்பட்டது. ஆக்சன் அதிரடியில் ரசிகர்களை திருப்திபடுத்திய 'ஜனநாயகன்' திரைப்படம், முதல் நாளில்உலகஅளவில்ரூ.78கோடி முதல்ரூ.80கோடிவரைவசூல்சாதனைபுரிந்துள்ளதாகதகவல்கள்வெளியாகியுள்ளன. இந்தியாவில் மட்டும் ரூ.41 கோடியை வாரி குவித்துள்ளது. தமிழ்நாட்டில், ரூ.36.50 கோடி வசூலித்துள்ள இப்படம், தெலுங்கில்ரூ.2.75கோடியும், இந்தியில்ரூ.1.75கோடியும்ஈட்டியுள்ளது. இன்னும்தொடரும்நாட்களில்வாரவிடுமுறை வேறு வருவதால், ஜனநாயகனின் வசூல் வேட்டை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூ.100 கோடி கிளப்பில் இன்றே இணைந்துவிடும் 'ஜனநாயகன்', ரூ.1,000 கோடி வசூலை வாரி குவித்து சாதனைபடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. முதல்அமைச்சர் விஜய்யின் கடைசிப்படமான 'ஜனநாயகன்', நிறைவான வசூலை வாரி வழங்குமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். எச். வினோத் இயக்கிய இந்தப் படத்தில் பூஜா ஹெக்டே, பாபி தியோல், மமிதா பைஜு, கௌதம் வாசுதேவ் மேனன், பிரகாஷ் ராஜ், நரேன் உள்ளிட்ட பலர் நடித்தனர். அனிருத் இசையமைத்துள்ளார்.

# இளையோர் டெஸ்ட்: இலங்கையை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய இந்தியா




இந்தியாஇலங்கைஅணிகள்இடையிலானஇளையோர் 2வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி (19 வயதுக் குட்பட்டோர்) கொழும்பில் கடந்த 20ந்தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 411 ரன்களும், இலங்கை 148 ரன்களும் எடுத்தன. 263ரன்கள்முன்னிலையுடன்2வதுஇன்னிங்சை ஆடிய இந்தியா3 விக்கெட்டுக்கு 208 ரன்களுடன்டிக்ளேர் செய்து 472 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இமாலய இலக்கை நோக்கி 2வது இன் னிங்சை ஆடிய இலங்கை 3வது நாள் முடிவில் 4 விக்கெட் டுக்கு 155 ரன்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் கடைசி நாளான நேற்று தொடர்ந்து பேட்டிங் செய்த இலங்கை அணி 260 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது.

இதன்மூலம் இந்தியா 211 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் 10 என்ற கணக்கில் கைப்பற்றியது. அத்துடன் ஒரு நாள் தொடரை இழந்ததற்கு இந்தியா பழிதீர்த்துக் கொண்டது. சுழற்பந்து வீச்சாளர் ரோகித் யாதவ் 4 விக்கெட்டும், வேகப்பந்து வீச்சாளர் சி.வெங்கட்டா 3 விக்கெட்டும் சாய்த்து வெற்றிக்கு வித்திட்டனர்.

# பிரான்ஸ் அணியின் பயிற்சியாளராகும் ஜிடேன்



சமீபத்தில் நிறைவடைந்த உலகக் கோப்பை கால்பந்து போட் டியில் பிரான்ஸ் அணி அரையிறுதியில் 02 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினிடம் தோற்று தொடர்ந்து 3வது முறையாக இறுதிப்போட்டிக்குள்நுழையும்வாய்ப்பைபறிகொடுத்தது.3வதுஇடத்துக்கான ஆட்டத்தில் 46 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்திடம் அடங்கியது. பிரான்ஸ் கேப்டன் கிலியன் எம்பாப்பே 8 கோல்கள் அடித்து தங்க ஷூ விருதை வென்றது மட்டுமே ஆறுதலாகும். இந்த போட்டியு டன் டிடியர் டெசாம்சின் 14 ஆண்டுகால பிரான்ஸ் அணியின் பயிற்சியாளர் பணி முடிவுக்கு வந்தது. 2018ம் ஆண்டில் பிரான்ஸ் உலகக் கோப்பையை வென்றது டெசாம்சின் பயிற்சியில் சிறப்பான செயல்பாடாக அமைந்தது. இந்த நிலையில் பிரான்ஸ் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் 54 வயதான ஜிடேன் நியமிக்கப்பட இருக்கிறார். 1998ம் ஆண்டு உலகக் கோப் பையை வென்றதில் முக்கிய பங்காற்றியவர் ஜிடேன். பிரான்ஸ் அணிக்காக 108 ஆட்டங்களில் ஆடி 31 கோல்கள் அடித்துள்ளார். ஓய்வுக்கு பிறகு ரியல்மாட்ரிட் கிளப்பின் பயிற்சியாளராக இருந்திருக்கிறார். அவரது பயிற்சியின் கீழ் ரியல்மாட்ரிட் அணி ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக், லா லிகா, கிளப் உலகக் கோப்பை, சூப்பர் கோப்பைகளை வென்று அசத்தியது.

# உலகக் கோப்பையில் இருந்து அர்ஜென்டினாவை நீக்க கோரி 2.3 கோடி கையொப்பங்கள்... மெஸ்சி அணிக்கு கிளம்பிய எதிர்ப்பு

உலகக்கோப்பையில் இருந்து அர்ஜென்டினாவை நீக்க கோரி தொடங்கப்பட்ட மனு 2.3 கோடி கையொப்பங்களை பெற்றுள்ளது.

சமீபத்தில் முடிவடைந்த பிபா உலகக் கோப்பை தொடரில் அர்ஜென்டினா அணி 2வது இடம் பிடித்து தொடரிலிருந்து வெளியேறினாலும், அதை சுற்றியுள்ள சர்ச்சைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. வரும் பிபா உலகக் கோப்பை தொடர்களில் அர்ஜென்டினா அணி பங்கேற்கக்கூடாது என்று வலியுறுத்தி தொடங்கப்பட்ட இணையவழி மனு தற்போது உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

2026 உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டினா அணியின் நடத்தை மற்றும் பிபா சாதகமான இருந்ததாக எழுந்த குற்றச்சாட்டுகள் காரணமாக, உலகம் முழுவதும் ரசிகர்கள் அர்ஜென்டினாவை நிரந்தரமாக உலகக் கோப்பையிலிருந்து நீக்க வேண்டும் என்று இணையத்தில் மனு ஒன்றை தொடங்கினர்.

ஆரம்பத்தில் 50 லட்சம் கையொப்பங்களை இலக்காக கொண்டு தொடங்கப்பட்ட இந்த மனு, தற்போது 2.3 கோடிக்கும் மேற்பட்ட கையொப்பங்களை பெற்று உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது அந்த அணிக்கு எதிராக உலகம் முழுவதும் ஒரு எதிர்மறை கருத்து உருவாகியிருப்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும், 2.3 கோடி கையொப்பங்களை பெற்றுள்ள இந்த மனு, அதிக கையொப்பங்கள் பெற்ற இணையவழி மனுக்களில் ஒன்றாக மாறியுள்ளது. கின்னஸ் உலக சாதனையில் 2.43 கோடி கையொப்பங்களுடன் "ஜூபிலி 2000" முதலிடத்தில் உள்ளது.

லியோனல் மெஸ்சி தலைமையிலான அர்ஜென்டினா அணி, இந்த உலகக் கோப்பையில் 8 போட்டிகளில் 7 வெற்றிகளை பெற்று 19 கோல்களை அடித்தது. இருப்பினும், போட்டிகளின் போது அர்ஜென்டினா வீரர்கள் எதிரணியை மிகவும் ஆக்ரோஷமாக எதிர்கொண்டதாகவும், நடுவர்கள் அவர்களிடம் மென்மையான அணுகுமுறையை கடைப்பிடித்ததாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.